

# தமிழ் வளர்ச்சி

மானியக் கோரிக்கை எண் – 46

அறிவிப்புகள்

2016-2017

# தமிழ் வளர்ச்சி

## மானியக் கோரிக்கை எண். 46

## அறிவிப்புகள்
## 2016 – 2017


**சேவூர் எஸ். இராமச்சந்திரன்**

இந்து சமயம் மற்றும் அறநிலையங்கள், தமிழ் ஆட்சிமொழி
மற்றும் தமிழ்ப் பண்பாட்டுத் துறை அமைச்சர்

## 1. அரசு அலுவலகங்களுக்கு அம்மா மென்தமிழ்ச் சொல்லாளர் மென்பொருள் வழங்குதல்

**மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் இதயதெய்வம் புரட்சித் தலைவி அம்மா அவர்களின் ஆணைப்படி,** கணினியில் ஆங்கில மொழிக்கெனப் பிழை திருத்தி, சொல் திருத்தி வசதிகள் இருப்பதைப்போல், தமிழில் ஒற்றுப்பிழை, சந்தி, மயங்கொலி உள்ளிட்ட இலக்கணப் பிழைகள் ஏதுமின்றி எழுதத்தக்க வகையிலும், தவறுகளைத் தானே சுட்டிக்காட்டித் திருத்திக்கொள்ளும் வகையிலும் உருவாக்கப்பட்டுள்ள **ரூ.300/–மதிப்புள்ள அம்மா மென்தமிழ்ச் சொல்லாளர் மென்பொருள் முதற்கட்டமாக 10,000 அரசு அலுவலகங்களுக்குப் பெற்று வழங்கப்படும். இதற்கென ரூ. 30 இலட்சம் ஒதுக்கீடு செய்யப்படும்.**

## 2. மின் காட்சியுரை மூலம் அரசுப் பணியாளர்களுக்கு ஆட்சிமொழித் திட்டப் பயிற்சி

**மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் இதயதெய்வம் புரட்சித் தலைவி அம்மா அவர்களின் ஆணைப்படி,** தமிழ் வளர்ச்சித் துறையால் ஆட்சிமொழித் திட்டம் குறித்து அளிக்கப்படும் பயிற்சி வகுப்புகளைக் கணினியுகத்திற்கு ஏற்ப ஒற்றுப்பிழை, மொழிபெயர்ப்பு, கலைச்சொல், மயங்கொலிச் சொல், தொடர் அமைப்பு போன்ற பல்வேறு பொருண்மைகள் குறித்த விளக்கங்கள் மின்காட்சியுரை மூலம் அரசுப் பணியாளர்களுக்கு விளக்கப்படும். இதற்கென **ரூ. 22 இலட்சத்து 80 ஆயிரம்** ஒதுக்கீடு செய்யப்படும்.

## 3. கவுஹாத்தி பல்கலைக்கழகத்தில் தமிழை விருப்பப் பாடமாகப் பயிலும் மாணவர்களுக்குக் கல்வி உதவித் தொகை

**மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் இதயதெய்வம் புரட்சித் தலைவி அம்மா அவர்களின் ஆணைப்படி,** அஸ்ஸாம் மாநிலத்தில் உள்ள கவுஹாத்தி பல்கலைக்கழகத்தில் தமிழை விருப்பப் பாடமாகப் பயிலும் **6** மாணவர்களுக்குக் கல்வி உதவித் தொகையாக **ரூ.1 இலட்சத்து 39 ஆயிரம்** வழங்கப்படும். மேலும், மாணவர்களின் எண்ணிக்கைக்கேற்ப ஆண்டுதோறும் கல்வி உதவித்தொகை வழங்கப்படும்.

## 4. மாவட்ட அளவில் கவிதை/கட்டுரை/பேச்சுப் போட்டிகளில் வெற்றி பெற்றவர்களுக்குப் புதியதாக மூன்றாம் பரிசு

**மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் இதயதெய்வம் புரட்சித் தலைவி அம்மா அவர்களின் ஆணைப்படி,** பள்ளி, கல்லூரி மாணவர்களுக்கு மாவட்ட அளவில் நடத்தப்பட்டுவரும் கவிதை /கட்டுரை / பேச்சுப் போட்டிகளில் வெற்றி பெற்றவர்களுக்குத் தற்போது முதல் பரிசு ரூ.10,000/–மும் இரண்டாம் பரிசு ரூ. 7,000/–மும் வழங்கப்பட்டு வருகிறது. இந்த ஆண்டு முதல் தற்போது வழங்கப்பட்டுவரும் முதல் இரண்டு பரிசுகளோடு மூன்றாவது பரிசாக ரூ.5,000/– வழங்கப்படும். இதற்கென ஆண்டு ஒன்றுக்கு கூடுதல் செலவினத் தொகையாக **ரூ.9 இலட்சத்து 60 ஆயிரம்** வழங்கப்படும்.

## 5. உலகத் தமிழாராய்ச்சி நிறுவன ஆய்வு நூலகம் சீரமைப்பு

**மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் இதயதெய்வம் புரட்சித் தலைவி அம்மா அவர்களின் ஆணைப்படி,** பன்மொழி அரிய ஆய்வு நூல்கள் மற்றும் கலைக் களஞ்சியங்கள் உட்பட **1.50** இலட்சம் நூல்களுடன், **1972**ஆம் ஆண்டு முதல் இயங்கி வரும் உலகத் தமிழாராய்ச்சி நிறுவன ஆய்வு நூலகத்தைச் சீராக்கிப் பராமரிக்கும் வகையில் ஆண்டு தோறும் தொடர் செலவினமாக **ரூ. 5 இலட்சம்** ஒதுக்கீடு செய்யப்படும்.

## 6. தமிழ் இலக்கியம் தடம் பதித்த 116 ஆண்டுகள் – நூல் வெளியிடல்

**மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் இதயதெய்வம் புரட்சித் தலைவி அம்மா அவர்களின் ஆணைப்படி,** தமிழியல் ஆராய்ச்சியாளர்கள் பயன்பெறத்தக்க வகையில் **தமிழ் இலக்கியம் தடம் பதித்த 116 ஆண்டுகள்** என்ற தலைப்பின் கீழ் 1900 முதல் 2016 வரை வெளிவந்த இலக்கிய நூல்களின் விவர அட்டவணை தமிழ், ஆங்கில மொழிகளில் வெளியிடப்படும். இதற்கென **ரூ. 5 இலட்சம்** வழங்கப்படும்.

## 7. உலகத் தமிழர்களின் படைப்புகளை வெளியிடுதல்

**மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் இதயதெய்வம் புரட்சித் தலைவி அம்மா அவர்களின் ஆணைப்படி,** 21ஆம் நூற்றாண்டில் அயலகத் தமிழ் இலக்கியத்தை வளப்படுத்தும் விதமாக ஆண்டுதோறும் 5 அயலக நாடுகள் ஒவ்வொன்றிலிருந்தும் தகுதி வாய்ந்த 5 தமிழ்ப் படைப்பாளர்களிடமிருந்து கவிதை, சிறுகதை, புதினம், கட்டுரை போன்ற தரமான படைப்புகளைப் பெற்று மதுரை, உலகத் தமிழ்ச் சங்கத்தின் சார்பில் நூல்களாக வெளியிட **ரூ. 15 இலட்சம்** வழங்கப்படும்.

## 8. மொரீசியசில் தமிழ் பயிற்றுவித்தல்

**மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் இதயதெய்வம் புரட்சித் தலைவி அம்மா அவர்களின் ஆணைப்படி,** தமிழர்கள் பெரும்பான்மையாக வாழும் நாடுகளில் ஒன்றான மொரீசியசு வாழ் தமிழர்களுக்குத் தமிழ் மொழியினை எழுதவும், பேசவும் பயிற்சி அளிக்கும் வகையில் ஆண்டுதோறும் தமிழ் பயிற்சி வகுப்புகள் நடத்தப்பெறும். இதற்கென **ரூ. 7 இலட்சம்** வழங்கப்படும்.

## 9. அயல்நாட்டு அறிஞர்களின் ஆய்வரங்கம்

**மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் இதயதெய்வம் புரட்சித் தலைவி அம்மா அவர்களின் ஆணைப்படி,** மதுரை உலகத் தமிழ்ச் சங்கத்தில் திங்கள்தோறும் அயல்நாட்டறிஞர் ஒருவரை அழைத்து தமிழின் பெருமைகளைப் பறைசாற்றும் வகையில் தமிழாய்வு அரங்கம் நடத்தப்பெறும். இத்தமிழாய்வு அரங்கம் நடத்தப் பெறுவதால் திங்கள்தோறும் தமிழுக்கு ஒரு புதிய தமிழாய்வு நூல் கிடைப்பதோடு தமிழாய்வு மேலும் செம்மையுறும். திங்கள் ஒன்றிற்கு ஒரு இலட்சம் ரூபாய் வீதம் ஆண்டொன்றுக்கு **ரூ. 12 இலட்சம்** ஒதுக்கீடு செய்யப்படும்.

## 10. பள்ளி மாணவர்களுக்குத் தூய தமிழ் அகராதிகள் வழங்குதல்

**மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் இதயதெய்வம் புரட்சித் தலைவி அம்மா அவர்களின் ஆணைப்படி,** மாணவச் செல்வங்களின் மனத்தில் நல்ல தமிழ்ச் சொற்களைப் பதிய வைத்து, பயன்பாட்டிற்குக் கொண்டு வருவதற்காகவும் வழக்கிழந்து வரும் தூய தமிழ்ச் சொற்களைப் பள்ளி மாணவர்கள் பயன்படுத்துவதற்கு உதவும் வகையிலும் பட விளக்கத்துடன் கூடிய அகராதியினைத் தொகுத்து வகுப்பு வாரியாக எழுதுபொருள் அச்சுத்துறை வாயிலாக அச்சிட்டு, கல்வித் துறை வாயிலாக மாணவர்களுக்கு வழங்கப்படும்.

## 11. தமிழ் கலைக்கழகம்

**மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் இதயதெய்வம் புரட்சித் தலைவி அம்மா அவர்களின் ஆணைப்படி,** பழைமை வாய்ந்த மொழியான தமிழ்மொழியை காக்கும் நோக்கில் அன்றாடம் பயன்பாட்டிற்கு வரும் பிறமொழிச் சொற்களுக்கு நிகரான தமிழ்ச் சொற்களைத் தரப்படுத்தி ஊடகங்களுக்கும், அறிவியலாளர்களுக்கும், மொழியியலாளர்களுக்கும் வழங்கும் நோக்கில் அகர முதலி இயக்ககத்தில் தமிழ் கலைக் கழகம் ஒன்று ஏற்படுத்தப்படும். இதற்கென ஆண்டுதோறும் **ரூ. 84 ஆயிரம்** ஒதுக்கீடு செய்யப்படும்.

## 12. வேர்ச்சொல் சுவடி வெளியிடுதல்

**மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் இதயதெய்வம் புரட்சித் தலைவி அம்மா அவர்களின் ஆணைப்படி,** தமிழ்ச் சொற்களைப் பகுத்தறிந்து அறிவியல் நோக்கில் ஆய்வு செய்து, புதிய கலைச் சொற்களை உருவாக்க விழைவோர்க்கு உதவும் வகையிலும், தேர்வாணையம் நடத்தும் போட்டித் தேர்வுகளின் தமிழ்ப் பாடத் தேர்வர்களுக்கும், பள்ளி மாணாக்கர்களுக்கும் பயன்படும் வகையில் தமிழ்ச் சொற்களின் சரியான வேர்ச் சொற்களைத் தொகுத்து வேர்ச்சொல் சுவடி எனும் நூல் எழுதுபொருள் அச்சுத்துறை வாயிலாக அச்சிட்டு வெளியிடப்படும்.

## 13. மொழிபெயர்ப்புப் பிரிவு கணினி மயமாக்குதல்

**மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் இதயதெய்வம் புரட்சித் தலைவி அம்மா அவர்களின் ஆணைப்படி,** தமிழ் வளர்ச்சி மற்றும் செய்தித் துறையின் கீழ் இயங்கும் மொழிபெயர்ப்புத் துறையின் பணிகளை விரைவு படுத்திட **16** உதவிப் பிரிவு அலுவலர்களுக்கு 16 கணினிகள் மற்றும் 4 அச்சு இயந்திரங்களுடன் 1 தொலை நகலி வழங்கப்படும். இதற்கென ரூ.10 இலட்சமும் மற்றும் அறைகலன் வசதிகள் செய்திட ரூ.5 இலட்சத்து 65 ஆயிரமும் என மொத்தம் **ரூ.15 இலட்சத்து 65 ஆயிரம்** ஒதுக்கீடு செய்யப்படும்.

**சேவூர் எஸ். இராமச்சந்திரன்**
இந்து சமயம் மற்றும் அறநிலையங்கள், தமிழ் ஆட்சிமொழி
மற்றும் தமிழ்ப் பண்பாட்டுத் துறை அமைச்சர்

"ஒவ்வொரு மொழிக்கும் ஒரு தனித்தன்மை இருப்பது உண்டு. ஆனால், நம் தமிழுக்கு இருக்கும் தனித்தன்மை வேறு மொழிகளுக்கு நிச்சயமாக இருக்காது. தான் சிதையாமல் மற்ற மொழிகளை வளர்க்கும் தனித் தன்மையும் ஆற்றலும் தமிழ் மொழிக்கு மட்டுமே உண்டு."

—மாண்புமிகு முதலமைச்சர்

**புரட்சித்தலைவி அம்மா** அவர்கள்